எம்.சி.ஓ.பி எண்: 2975/2024 தேதி: 02.03.2026

மசா. : 2

பெயர் : செல்வம்

த/பெ. : மூர்த்தி

வயது : 31

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 11 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கவரவில்லை. 2ம் மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னை போலீஸ்சார் விசாரிக்கவில்லை. மனுதாரருக்கு நான் உறவினர் இல்லை. அவர்கள் யார் என்று எனக்கு தொியாது. விபத்து நடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் இடையே சுமார் 8 கிலோமீட்டர் துாரம் இருக்கும். விபத்து நடந்த அன்று காலை நான் வேலைக்காக சம்பவ இடத்திற்கு சென்றேன். விபத்து நடக்கும்போது நான் டீ கடையில்(only coffee) நின்றுகொண்டிருந்தேன். எனக்கு தமிழ் படிக்கதெரியும். விபத்து சமயத்தில் கண்டெனர் லாாி கடக்கமுயற்சிக்கும்போது பேருந்தின் பின் படிக்கட்ட பகுதி கண்டெனர் லாாியுடன் இடித்தது. விபத்து நடந்த இடத்தில் பின் பகுதியிலிருந்து விபத்தை பார்த்தேன். 12.03.2024 அன்று ஜிஎஸ்டி சாலையின் சிறுநாகலூர் சந்திப்பு அருகே சாலையின் ஓரமாக நின்றுகொண்டிருக்கும்போது என்று எனது சத்திய பிரமாணா வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு முன்னால் இருந்து விபத்தை பார்த்ததாக கூறியிருக்கிறேன் என்றால் நான் விபத்தை பின் இருந்து பார்த்தேன் என்றால் சரி. சத்தியபிரமாணாவாக்குமூலத்திற்கும், என் குறுக்கு விசாரணைக்கும் முன்னுக்கு பின் முரணாக சாட்சி இருப்பதால் என் சாட்சி ஏற்கதக்ககதல்ல என்றால் சரியல்ல. சத்தியபிரமணாவாக்குமூலத்தில் 2ம் பக்கத்தில் பேருந்தின் பின் படிக்கட்டு பகுதி லாாி பக்கவாட்டு பகுதியில் ஏறி விபத்து ஏற்பட்டது. உடனே நானும் அருகில் இருந்தவரும் சென்று பார்த்தபோது அந்த பேருந்தின் பின் பக்க படியின் அருகில் பேருந்தில் வந்த நான்கு

கல்லூாி மாணவர்கள் பலத்த காயம் அடைந்து 3 பேர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கூற்றுப்படி 4 பேர் படிக்கட்டில் பயணம் செய்ததால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு இறந்துபோனவர்தான் காரணம் என்றாலும் லாாியோ, பஸ் காரணம் இல்லை என்றால் சரியல்ல. நான் மனுதாரரருக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்பொழுது என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் சம்பவ இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. அது எமசா1 ஆகும். விபத்து நடந்த சாலை 20 அடி சாலை. ஒரே நேரத்தில் இரண்டு லாாி செல்லும். அது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரி. லாாி சாலையின் ஓரமாக நின்று கொண்டிருந்தது என்றால் அது சாலையின் வெள்ளைக்கோட்டிற்கு அருகில் நின்றுகொண்டிருந்தது. இறந்துவர்தான் பஸ் படிக்கட்டில் பயணம் செய்தார் என்றாலும் இந்த விபத்திற்கு காரணம் பஸ் படிக்கட்டில் பயணம் செய்தவரும் பேருந்து காரணம் என்றால் சரியல்ல.

x

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.